இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 178 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 25 – வியாழக்கிழமை 08 பிப்ரவரி 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 178 : Thiruvalluvar Year - 2055 - Thai 25 - Thursday 08 February 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டின் கெஸ்டாம்ப் (Gestamp), டால்கோ (Talgo) மற்றும் மேப்ட்ரி (Mabtree) ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சந்தித்துப் பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், ஸ்பெயின் நாட்டின் எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, எடிபன் நிறுவனத்தின் உயர் அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

### தன்னிச்சையான - பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி

# நிதி நிர்வாகத்தில் மாநிலங்களின் குரல் வளையை நெரிப்பதா?

## கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராகத் தொடுத்துள்ள வழக்கில் தமிழ்நாடு அரசு துணை நிற்கும்! கேரள முதல்வருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 8-**

**"மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும்" என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு நேற்று முன்தினம் (6.2.2024) எழுதியுள்ள கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து, மாண்பமை உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளதோடு, இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### தெளிவான ஒருமித்த கருத்து உருவாகியுள்ளது!

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில், ஒன்றிய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது என்றும், மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் இத்தகைய மறைமுகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகியுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றும், இருப்பினும், மாநிலங்கள் கடன் வாங்குவதற்கா ன வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரிவின்படி, ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து, மாநில அரசின் நிதிப் பொறுப்பு மற்றும் வரவுசெலவு மேலாண்மை விதிகளின்படி வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் கருவியாக ஒன்றிய அரசால் மாற்றப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக அரசமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதிய நிதிக் கூட்டாட்சியின் அடிப்படைக்கே மாபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஒன்றிய அரசின் பின்னடைவை ஏற்படுத்தும் போக்கு!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மாநில அரசின் முன்முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் புள்ளி விவரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

முதலாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்ச வரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# தமிழ்நாட்டுக்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பு!

## கண்டித்து மக்களவையில் தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு! டி.ஆர்.பாலு – ஆ.இராசா ஆவேசம்!

**புதுடெல்லி, பிப். 8-**

**தமிழ்நாட்டிற்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பதற்கு கண்டனம் தெரிவித்து நாடாளுமன்ற மக்களவையிலிருந்து "இந்தியா" கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு செய்தன. நிவாரண நிதியை வழங்க மறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, கொறடா ஆ.இராசா ஆகியோர் ஆவேசமாகப் பேசினர்.**





தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பின்போது வானிலை ஆய்வு மையம் உரிய முன்னெச்சரிக்கை தரவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதனால் ரயிலில் ஆயிரக்கணக்கான பயணிகள் தவிக்கும் நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. வெள்ள பாதிப்பின்போது வானிலை மையத்தின் கணிப்புகள் முற்றிலுமாக தோல்வியடைந்தன. சென்னை வானிலை ஆய்வு மையம் மேம்படுத்தப்படாததால் உரிய முன்னெச்சரிக்கையை வழங்கவில்லை. சென்னை வானிலை ஆய்வு மையத்தில் நவீன உபகரணங்கள் இல்லை. உரிய முன்னெச்சரிக்கை இல்லாததால் ஆயிரக்கணக்கான பயணிகள் ரயிலில் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

### டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம்!

டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது ஒன்றிய அமைச்சர்கள் குறுக்கிட்டு பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம் தெரிவித்தார். டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது, ஒன்றிய இணையமைச்சர்கள் நித்யானந்த் ராய், எல்.முருகன் ஆகியோர் குறுக்கீடு செய்தனர். அதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அவையில் அமளி ஏற்பட்டது. ஆனால் வெள்ள நிவாரணம் தொடர்பாக ஒன்றிய அரசு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

வெள்ள நிவாரண நிதி குறித்து பதிலளிக்காததால் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளும் வெளிநடப்பு செய்தது. தமிழ்நாட்டிற்கு உரிய வெள்ள நிவாரணம் வழங்காததை கண்டித்தும், அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு பதில் அளிக்காததை கண்டித்தும் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மேலும், காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 08-02-2024


# நிதி அமைச்சருக்கு அவர் கணவரே பதிலளிக்கிறார் - 2

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் எழுதுகிறார்....

* சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செல்லாப் பண நடவடிக்கை கொடுத்த அடியிலிருந்து இன்னும் மீளவில்லை.

* கிராமப் புறங்களின் துன்பம் இடை வெளியின்றித் தொடர்கிறது.

* ஆளும் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் 2022-23ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ஏற்பட்ட 13.5% வளர்ச்சியானது திறமையாகப் பொருளாதாரம் கையாளப்பட்டதன் விளைவென்று பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், உண்மையில் அதற்கு முந்தைய இரு ஆண்டுகளில் பொருளாதாரம் இருந்த படுபாதாளத்திலிருந்து பார்க்கும் போதுதான் 13.5% என்கிற விகிதம் கவர்ச்சியாகத் தோன்றுகிறது என்கிற உண்மையைப் பூசி மெழுகிவிட்டுத்தான் அவர்கள் பெருமை பேசுகிறார்கள்.

* பொருளாதாரம் கொரோனா பெருந் தொற்றுக் காலத்திற்கு முன்பிருந்த நிலைக்கு இன்னமும் திரும்பவில்லை என்கிற உண்மையை நாட்டு மக்கள் பார்த்து விடக் கூடாது என அவர்கள் நினைக்கிறார்கள்.

* பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பேயும் கூட பொருளாதாரத்தின் வேகம் குறைந்திருந்தது என்பதை நாம் மறக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

* தொழில் முனைவோர் நாட்டிற்குள் முதலீடு செய்யத் தயாரில்லை.

* மூலதனம் நாட்டின் எல்லைகளைக் கடந்து இரக்கமில்லாமல் பறந்து கொண்டிருக்கிறது.

* மக்கள் இது போன்று எப்போதும் வாழ்ந்ததில்லை. பாலாறும் தேனாறும் ஓடும் ஒரு பொற்காலத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்று அரசுகள் பிரகடனம் செய்யும்போது நாம் அவற்றின் உள்நோக்கத்தைச் சந்தேகிக்க வேண்டும். இப்படி அறிவிப்பதின் மூலம் அவர்கள் மக்களின் பொதுக் கருத்தை வளைக்க நினைக்கிறார்கள், மோசமான நிர்வாகத்திலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப நாட்டையே இரைச்சலிலும், கண்கவர் காட்சிகளிலும் மூழ்கடிக்கிறார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

* நாம் சுபமான நாட்களில் வாழ்வதாகவும் (அச்சே தின்) தற்போது ஒரு அமிர்த காலத்தில் இருப்பதாகவும் அரசு, குறிப்பாகப் பிரதமரும் அவரின் அதிகார வர்க்க அடிமைகளும், திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். அவர்கள் தம் பெருமையாகச் சொல்லுவதெல்லாம் எவ்வளவு பொய்யானவை, தவறான தோற்றம் தருபவை.

* பான்ச் பிரான், அம்ரித் கால், ஆத்மநிர்பார் பாரத், டிஜிட்டல் இந்தியா, விஸ்வகுரு என முடிவில்லாமல் எழுப்பப்படும் இரைச்சல்களும் கூட நம் தேசிய வாழ்வின் பவித்திரமான ஒவ்வொரு தருணத்தையும் ஒரு மாபெரும் சர்க்கஸாக மாற்றி, சிறுமைப்படுத்தி அவற்றின் உள்ளார்ந்த பொருளை அழிப்பதற்கான முயற்சிதான். இது மோடி ஆட்சியின் ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது. இத்தகைய சர்க்கஸுகள் திரும்பத் திரும்ப நடத்தப்பட்டு, சகஜமாக்கப்பட்டு விட்டதால் நாடு அவற்றுடன் வாழப் பழகிவிட்டது போலவே தோன்றுகிறது.

என்று வரிசையாக வரிசைப்படுத்தி பா.ஜ.க.வின் பொருளாதாரத் தோலை உரித்துக் காட்டி இருக்கிறார் பரகால பிரபாகர்.

**“மோடி ராஜ்ஜியத்தின் நம்ப முடியாத அளவிலான திறமையின்மைதான் இந்தியாவின் பொருளாதாரத் துயரங்களுக்குக் காரணம். தீர்க்கமான சிந்தனையின் அடிப்படையிலான ஒரு கோர்வையான பொருளாதாரத் தத்துவத்தை அது உருவாக்க முடியவில்லை. பொதுத்துறையின் சொத்துக்களை விற்பதே பொருளாதாரச் சீர்திருத்தம் என்கிற எளிய சிந்தனையை அது விற்க முனைகிறது. பொதுத்துறையைத் தொடர்ந்து நடத்துவதற்கான, வலுவான உண்மையான சீர்திருத்தங்கள் செய்வதை அது தவிர்க்கிறது”** என்று குற்றம் சாட்டுகிறார் பரகால பிரபாகர்.

**“ஒரு புறத்தில் சந்தை சார்ந்த நவதாராளமயக் கொள்கையைக் கிளிப்பிள்ளை போலத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தப் ‘புதிய இந்தியா’, மறுபுறத்தில் தேசத்தின் சொத்துக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனக்கு வேண்டிய தொழில்துறை நண்பர்களுக்கு மலிவான விலைக்குக் கொடுத்து வருகிறது. சமீபத்தில் வெளியான அதிரடியான ஹிண்டென்பெர்க் அறிக்கை கவுதம் அதானி குழுமத்திற்கு மோடி அரசிடம் இருக்கும் நெருக்கமான உறவு குறித்து சில முக்கியமான கேள்விகளை எழுப்பியிருக்கிறது. இதனால் எழுந்த சந்தேகக் காற்றை அரசு தூய்மை செய்யுமா என இன்னமும் நாடு காத்திருக்கிறது. ஒரு முறையான, ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதாரப் பார்வையும், திறமையான பொருளாதார ஆலோசகர்களும் இந்த அரசுக்கு இல்லாத காரணத்தினால் ‘புதிய இந்தியா’ சூனியக்காரப் பொருளாதார நிபுணர்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது”** என்று குற்றம் சாட்டி இருக்கிறார் அவர்.

**“பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பிருந்த அடிமட்ட வளர்ச்சி அளவைக் கூட இது வரை பொருளாதாரம் எட்டவில்லை. பொருளாதாரத்தை இப்படிச் சின்னாபின்னமாக்கிய ஆளும்கட்சி அரசியல் தகிடுதத்தத்தில் தான் ஒரு மேதை என்பதை நிரூபித்து விட்டது”** என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் சொல்வது இப்போது வெளியிடப்பட்டு இருக்கும் நிதிநிலை அறிக்கையையும் சேர்த்துத்தான் என்றே பொருள் கொள்ள வேண்டும். ●●

# ஸ்பெயின் நாட்டு மக்களுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி !

**சென்னை, பிப்.8-**

**ஸ்பெயின் நாட்டுப் பயணம் முடித்து தாய்த் தமிழ்நாட்டுக்கு புறப்படுவதையொட்டி நேற்று முன்தினம் மாலை ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதாவது :-**

ஸ்பெயின் நாட்டு மக்களுக்கு எனது நன்றிகள்!

ஸ்பெயின் பயணத்தை முடித்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வருகிறேன்.

மறக்க முடியாத இனிய நினைவுகளை ஸ்பெயின் நாட்டினரும், அங்குள்ள தமிழர்களும் அளித்தனர்.

ஸ்பெயின் நாட்டில் தமிழர்களைச் சந்தித்தது; எனது நினைவுகளின் பொக்கிஷமாக இருக்கும்.

பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஸ்பெயின் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்!

இவ்வாறு தமது ‘எக்ஸ்’ பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசுமுறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (06.02.2024) தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து தாயகம் திரும்பினார். திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்கள் உடன் உள்ளார்கள்.

## ஸ்பெயின் – தொழிற்துறையின் ஜாம்பவான் ‘எடிபன்’ நிறுவனம்

# தமிழ்நாட்டில் ரூ.540 கோடி முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்), பிப். 8 -**

**எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான ஒப்பந்தம் மற்றும் ஸ்பெயின் நாட்டின் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் சந்திப்பு மகிழ்ச்சிக்குரியது என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

அது வருமாறு:-

ஸ்பெயினின் தொழில்துறை ஜாம்பவான்களான கெஸ்டாம்ப், டால்கோ மற்றும் எடிபன் ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மேற்கொண்டேன்.

இந்தியாவின் உற்பத்தி மையமான தமிழ்நாட்டில் உள்ள எல்லையற்ற வாய்ப்புகளை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான ஒப்பந்தம் மேற்கொண்டது மகிழ்ச்சிக்குரியது.

நோய்த்தடுப்பு சிகிச்சையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள Mabtree என்ற நிறுவனத்துடன் பயனுள்ள கலந்துரையாடலையும் மேற்கொண்டேன். இது ஸ்பெயின் நாட்டின் வெற்றிகரமான பயணத்தின் இறுதிக் கட்டம் ஆகும்.

இதுபோன்ற பலனளிக்கும் முடிவுகளுடன், நான் நாளை ஸ்பெயினிலிருந்து புறப்படுகிறேன், சில நாட்களுக்குப் பிறகு உங்கள் அனைவரையும் பார்க்க ஆவலுடன் இருக்கிறேன், இது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளிக்கிறது. அதேபோன்று, ஸ்பெயினில் உள்ள தமிழ் சமூகம் எனக்குக் காட்டிய அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கும் நன்றியுள்ளவனாவேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கேரள அமைச்சரவை

# புதுடெல்லியில் இன்று நடத்தும் போராட்டத்தில் தி.மு.க. பங்கேற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மலையாள மொழியில் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 8 -**

**கேரள அமைச்சரவை புதுடெல்லியில் இன்று (8ஆம் தேதி) நடத்தும் போராட்டத்தில் தி.மு.க.வும் பங்கேற்கும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அவரது சமூக வலைதளப் பதிவு மலையாள மொழியிலும் வெளியாகி உள்ளது.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு: -



“ബഹുമാനപ്പെട്ട കേരള മു
എഴുതിയ കത്ത് ബഹുമാന
@PRajeevOfficial എനിക്ക് കൈമ

സംസ്ഥാന സർക്കാരും
#UnionGovernment ഇടപെടുന്നതി
കേരള സർക്കാരിൻ്റെ ഹർ
പിന്തുണ നൽകുമെന്ന് അ
കത്തിൽ ഞാൻ ഉറപ്പ് കൊടു

കൂടാതെ, ബഹുമാനപ്പെട്ട #
തീയതി ഡൽഹിയിൽ സം
#DMK പങ്കെടുക്കും.

തെക്കേ ഇന്ത്യയില് ഞങ്ങളും
ബഹുമാനപ്പെട്ട സഹോദരി
ഭരണഘടനയിൽ അചഞ്ചല
എല്ലാവരും ഇന്ന് സംസ്ഥാന
നിൽക്കുന്നു

“மாண்புமிகு தோழர் @PinarayiVijayan அவர்கள் எழுதிய கடிதத்தை, கேரள மாநில தொழிற்துறை அமைச்சர் மாண்பு மிகு @PRajeevOfficial அவர்கள் என்னிடம் அளித்திருந்தார்.

அதற்கான பதில் கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசின் நடவடிக்கைகளுக்குத் தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும் என்று உறுதியளித்திருக்கிறேன்.

மேலும், நாளை மறுநாள் (பிப்ரவரி 8) தலைநகர் தில்லியில் கேரள அமைச்சரவை நடத்தவுள்ள போராட்டத்தில், நாடாளுமன்ற வளாகத்தில் கருஞ்சட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தும் தி.மு.க.வும் பங்கேற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்கில் நாம், தோழர் @PinarayiVijayan அவர்கள், கிழக்கில் மரியாதைக்குரிய சகோதரி @MamataOfficial அவர்கள் என இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது உறுதியான பற்றுதலைக் கொண்டு பேசும் இன்னும் பிற தலைவர்களுடைய குரல்கள் தான் வேறே தவிர; கொள்கை ஒன்றுதான்!

கூட்டுறவுக் கூட்டாட்சியை நிலைநாட்டி, மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் வரை நம் உரிமைக்குரல் ஓயாது!

உயிர்த்தீயாய்ச் சுடர்விடும் மாநில சுயாட்சி முழக்கத்தைப் பாசிச பா.ஜ.க.வால் ஒருபோதும் அணைத்துவிட முடியாது. நிதி, நிருவாகம் உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளிலும் மாநிலங்களுடைய உரிமைகள் நிச்சயம் நிலை நாட்டப்படும். அதற்கான காலம் கனிந்துகொண்டு இருக்கிறது!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சிங்காரச் சென்னை திட்டத்தின் கீழ் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாகக் கட்டப்பட்ட சமுதாய நலக்கூட்டம் அமைக்கும் பணியின் துவக்க விழா நேற்று முன்தினம் நடந்தது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார். உடன் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மத்திய சென்னை எம்.பி., தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் மதன்மோகன் உள்ளிட்டோர் உள்ளனர்.

## பா.ஜ.க.விற்கு ஆதரவாக சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய

# தேர்தல் அதிகாரிக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

## “ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி படுகொலை செய்துவிட்டார்”

**புதுடெல்லி, பிப்.8 -**

**சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய தேர்தல் அதிகாரியை உச்சநீதிமன்றம் கடுமையாகக் கண்டித்துள்ளது. “வாக்குச்சீட்டை அவர் திருத்தி இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது” என்று வாய் மொழியாகக் குறிப்பிட்டுள்ளது.**

**தலைமை நீதிபதி சந்திர சூட் இதுபற்றி குறிப்பிடுகையில், “இதுதான் தேர்தல் நடத்தும் லட்சணமா? ஜனநாயகக் கேலிக் கூத்து; ஜனநாயகப் படுகொலையே நடந்துள்ளது. அந்த மனிதர் (தேர்தல் அதிகாரி) மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.**



காங்கிரஸ் - ஆம் ஆத்மி கட்சி கவுன்சிலர்களின் வாக்குகள் செல்லாது என்று அறிவித்து விட்டு, வெறும் 8 வாக்குகள் பெற்ற பா.ஜ.க. வேட்பாளர் சண்டிகர் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றார் என்று அந்தத் தேர்தல் அதிகாரி வெளியிட்ட அறிவிப்பு தொடர்பான வீடியோவை முழுவதுமாக பார்த்த பின், தலைமை நீதிபதி சந்திர சூட் மேற்கண்டவாறு கடுமையாகத் தெரிவித்தார்.

“தேர்தல் அதிகாரியின் நடத்தையைப் பார்த்து இந்த நீதிமன்றமே திகைத்துப் போனது. அவர் ஏன் காமிராவையே பார்க்கிறார்? தப்பியோடுபவர் போல் திகைத்துக் காண்கிறார். வாக்குச் சீட்டில் அவர் திருத்தம் செய்வது நன்கு தெரிகிறது. ஒரு தேர்தல் அதிகாரியாக இருந்து கொண்டு இப்படியா நடந்துகொள்வது?

காமிராவையே பார்த்துக்கொண்டு திரும்பத் திரும்ப வாக்குச் சீட்டில் திருத்தம் செய்கிறார். வாக்குச் சீட்டின் அடியே குறுக்காக கோடு உள்ளதை அங்குள்ள ட்ரேவில் போட்டு விடுகிறார். பின்னர் அதை எடுத்து மேல்புறத்தில் கோடு போட்டு அந்த வாக்குச் சீட்டை செல்லாததாக்கி விட்டு, மீண்டும் காமிராவை பார்க்கிறார்.

அவருக்குச் சொல்லுங்கள். அவரை உச்சநீதிமன்றம் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தேர்தல் நடைமுறையின் புனிதம்தான் இந்த நாட்டின் நிலையான சக்தியாகும்” என்று மேலும் தலைமை நீதிபதி தெரிவித்தார்.

சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய தேர்தல் அதிகாரி, வருகிற 19ஆம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, தான் அவ்வாறு நடந்து கொண்டதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களின் தலைநகரான யூனியன் பிரதேசம் சண்டிகரின் மேயர் தேர்தல் கடந்த இரு தினங்களுக்கு முன்னதாக நடந்தது. அதில் பா.ஜ. மேயர் வேட்பாளர் மனோஜ் சோங்கர் 16 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட நிலையில், ஆம் ஆத்மி - காங்கிரஸ் கூட்டணியின் மேயர் வேட்பாளர் 12 வாக்குகள் பெற்றதாகவும், எட்டு வாக்குகள் செல்லாது என தேர்தல் அலுவலர் அறிவித்தார்.

### தேர்தல் அதிகாரி பதிலளிக்க உத்தரவு!

திட்டமிட்டு வாக்குச்சீட்டுகளில் பேனாவால் சில திருத்தம் செய்து வாக்குச்சீட்டு செல்லாது என தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவித்ததாக கூறி அதற்கான வீடியோவை காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் வெளியிட்டன. இதைத்தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக ஆம் ஆத்மி, காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் குல்தீப் குமார் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பஞ்சாப், அரியானா உயர்நீதிமன்றம், தேர்தல் அதிகாரி பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்கண்ட விவகாரத்தில் ஆம் ஆத்மி கவுன்சிலர் குல்தீப் குமார் (தோற்கடிக்கப்பட்ட மேயர் வேட்பாளர் ) தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவானது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட், நீதிபதிகள் ஜே.பி.பரிதிவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அமர்வில் திங்களன்று விசாரணைக்கு வந்தது.

### அதிகார துஷ்பிரயோகம்!

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி,” சண்டிகர் மேயர் தேர்தலில் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகளின் வாக்கு சீட்டுகளை வேண்டுமென்றே செல்லாதவைகளாக்கி அதிகார துஷ்பிரயோகம் செய்து விட்டார். வேண்டுமென்ற பாகுபாடுடன், தேர்தல் அதிகாரி செயல்பட்டு எட்டு வாக்குச் சீட்டுகளில் திருத்தம் செய்துவிட்டார். அதனால் நடத்தி முடிக்கப்பட்டுள்ள சண்டிகர் மேயர் தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, “இந்த விவகாரத்தில் ஆதாரமாக காண்பிக்கப்படும் வீடியோக்கள் ஒருவருக்கு மட்டும் சாதகமான நிலையில் காண்பிக்கப்படுகிறது. முழு பதிவுகளையும் பார்த்த பின்னர் தான் முடிவெடுக்க முடியும். அதனால் இந்த விவகாரத்தில் ஒரு விரிவான பார்வை தேவைப்படுகிறது என தெரிவித்தார்.

### இடைக்கால தடை!

அப்போது சரமாரி கேள்வியெழுப்பிய தலைமை நீதிபதி, “சண்டிகர் மேயர் தேர்தல் விவகாரத்தில் முழு வீடியோ பதிவுகளையும் வாக்கு சீட்டுகளையும் பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். இதில் தற்போது வீடியோ ஆதாரங்களை வைத்து இருக்கும் சண்டிகர் துணை ஆணையர் அனைத்து விவரங்களையும் திங்கள் மாலை 5மணிக்குள் உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரலிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும். மேலும் இந்த விவகாரத்தில் எதிர்மனுதாரர் பதிலளிக்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பிக்கிறது” என உத்தரவிட்ட தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், பிப்.7ம் தேதி (இன்று) நடைபெற இருந்த சண்டிகர் மாநகராட்சி கூட்டத்துக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400க்கும் மேற்பட்ட தொகுதிகளில் ஜெயிக்கும். இதில் பாரதிய ஜனதா மட்டும் 370 தொகுதிகளில் வெற்றி பெறும் எனப் பிரதமர் மோடி பேசியுள்ளாரே; பார்த்தியா அண்ணே!

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பார்த்தேன்! சண்டிகர் மேயர் தேர்தலில் 'ஜனநாயகப் படுகொலை நடந்துள்ளது' என உச்சநீதி மன்றமே வேதனைப்படும் அளவு ஜனநாயகத்தை கண்ணுக்கெதிரே பட்டப் பகலிலேயே கொலை செய்தவர்களாயிற்றே பாரதிய ஜனதா கட்சியினர். அதுபோல நாடாளு மன்றத் தேர்தலிலும் தில்லு முல்லு செய்ய ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறார்களோ என்னவோ?**

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு சேலம் வருகை!

# சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் கோரிக்கை மனுக்களை வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், பிப். 8 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொது செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., எழிலன் எம்.எல்.ஏ., கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி., எம்.எம்.அப்துல்லா எம்.பி., சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் வரும் பிப்ரவரி 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சேலம் 5 ரோடு அருகே உள்ள சென்னீஸ் கேட்வே (CENNEYS GATEWAY) ஹோட்டலுக்கு வருகை புரிந்து அங்குள்ள பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

எனவே சேலம் மத்திய மாவட்டத்தைச் சார்ந்த தொழிற்துறையினர், வியாபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், சூழலியலாளர்கள், மருத்துவர்கள், வணிகர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு - ஆ.இராசா ஆவேசம்!

### கருஞ்சட்டை அணிந்து போராட்டம்!

தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலி ருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாதது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது ஒன்றிய அரசு பதிலளிக்கவில்லை என நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர். பாலு குற்றம்சாட்டினார். டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒன்றிய அரசை கண்டித்து நாளை (8ம் தேதி) நாடாளுமன்றத்தில் உள்ள காந்தி சிலை முன், கருஞ்சட்டை அணிந்து போராட்டம் நடத்தப்படும் என்றும் இந்தியா கூட்டணியை கண்டு பா.ஜ.க. பயந்துள்ளது என்றும் கூறினார்.

### ஆ.இராசா குற்றச்சாட்டு

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய தி.மு.க. கொறடா ஆ.இராசா எம்.பி., தமிழ்நாட்டுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுவதாக குற்ற ஞ்சாட்டினார். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிரதமரை சந்தித்து 37ஆயிரம் கோடி ரூபாய் நிவாரணம் கேட்ட போதும், ஒன்றிய அரசு ஒரு பைசாகூட வழங்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார். தமிழ்நாடு அனைத்துக் கட்சிக் குழு, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து வலியுறுத்திய போதும், இதுவரை வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டிய ஆ.இராசா, தமிழ்நாட்டை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்று குற்றஞ்சாட்டினார்.

தமிழ்நாடு அரசு ரூ.37 ஆயிரம் கோடி வெள்ள நிவாரணம் கோரியது. தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமரை சந்தித்து வலியுறுத்தினார். தமிழ்நாட்டு அனைத்துக் கட்சிக் குழு உள்துறை அமைச்சரை சந்தித்தது.

ஆனால் தமிழ்நாடு அரசு கோரிய ரூ.37,000 கோடி வெள்ள நிவாரணம் எப்போது வழங்கப்படும், எவ்வளவுத் தொகை வழங்கப்படும் என அமைச்சரின் பதிலில் உறுதி அளிக்கவில்லை. ஒன்றிய அரசின் குழு தமிழ்நாட்டில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசும் அறிக்கை அளித்துள்ளது. இரண்டு அறிக்கையும் ஒன்றிய அரசிடம் உள்ளது. உள்துறை அமைச்சர் அளித்த உத்தரவாதத்தின்படி, வெள்ள நிவாரணத் தொகை எப்போது விடுவிக்கப்படும்? அந்த வெள்ள நிவாரணத் தொகை பா.ஜ.க. ஆளும் குஜராத் போன்ற மாநிலங்களுக்கு வழங்கியது போல இருக்குமா?

மாநில பேரிடர் நிதி என்பது வேறு, தேசிய பேரிடர் நிதி என்பது வேறு என்பதை சுட்டிக் காட்டிய ஆ.இராசா எம்.பி. மாநில பேரிடர் மேலாண்மை நிதியை வெள்ள நிவாரண நிதி என்று கூறுவது ஏமாற்றும் செயல் என்று குற்றஞ்சாட்டி னார். குஜராத் உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநி லங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கும் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு பாரபட்சம் காட்டுகிறது என்றும் ஆ.இராசா கடுமையாக விமர்சித்தார். தேசிய பேரிடர் நிவாரண நிதியை அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக வழங்கும் வகையில் புதிய விதிமுறைகளை வகுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் ஒன்றிய அரசின் செயல்பாடு மாற்றாந்தாய் மனப்பான்மையில் உள்ளது. மாநில பேரிடர் நிதி என்பது வேறு, தேசிய பேரிடர் நிதி என்பது வேறு. இரண்டையும் ஒன்றிய அமைச்சர் குழப்பிக் கொள்கிறார். 15வது நிதி ஆணையத்தின் கீழ், ஆண்டுதோறும் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் பேரிடர் மேலாண்மை நிதியை வெள்ள நிவாரண நிதியாக கூறுவது ஏற்புடையதல்ல என ஆ.இராசா குறிப்பிட்டார்.

**முதல் பக்கத் தொடர்ச்சி**

முன்னாள் எம்.பி.

# தஞ்சை கு.பரசுராம் மறைவு!

## துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - முன்னணியினர் அஞ்சலி!

தஞ்சாவூர், பிப். 8 -

தஞ்சாவூர் மத்திய மாவட்டம், நீலகிரி ஊராட்சியின் முன்னாள் தலைவரும், தஞ்சை நாடாளுமன்ற தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான கு.பரசுராம் அவர்கள் உடல்நலக்குறைவின் காரணமாக 06.02.2024 அன்று மதியம் 12.30 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கு.பரசுராம் அவர்கள் 3 முறை நீலகிரி ஊராட்சிமன்றத் தலைவராகவும், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினராகவும் சிறப்பாக பணியாற்றியவர். திருக்குறள் மீது அதிக பற்றுடையவர், இதனால் மாணவ, மாணவியருக்கு 50,000க்கும் மேற்பட்ட திருக்குறள் புத்தகம் வழங்கியுள்ளார். நீலகிரி ஊராட்சியில் அதிக நூலகங்களை திறந்துள்ளார். கழகத் தோழர்களிடம் அன்போடு பழகக்கூடியவர்.

இவர் இருதய நோய்க்கு சிகிச்சைப் பெற்று வந்தார். இந்நிலையில் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் 06.02.2024 செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்தார்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சை மாநகர செயலாளர் - மேயர் சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

கு.பரசுராமன் அவர்களின் இறுதி சடங்கு நேற்று மதியம் 03.00 மணிக்கு தஞ்சாவூர் ரகுமான் நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)11/2024 நாள் : 05.02.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17,24,26,51,52, 53,54,55,56,57,58க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 39 பணி | 21.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 22.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 076/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 06.02.2024


நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு சேலம் வருகை!

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் கோரிக்கை மனுக்களை வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், பிப். 8 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களால் நாடாளுமன்றத் தேர்தலுக்காக, தி.மு.க துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையிலான தேர்தல் அறிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் தி.மு.க. தலைமை கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், விவசாய அணி செயலாலர் ஏ.கே.எஸ்.விஜயன், சொத்துப் பாதுகாப்பு குழு செயலாளர் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழிநுட்ப அணி செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன், கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், எம்.பி., மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.எழிலரசன் எம்.எல்.ஏ., அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., மருத்துவர் அணி செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர், அதன்படி வருகின்ற பிப்ரவரி 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சேலம் 5 ரோடு அருகே உள்ள சென்னீஸ் கேட்வே (CENNEYS GATEWAY) ஹோட்டலுக்கு தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் வருகை புரிந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

எனவே, சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், வியாபாரிகள், கல்வியாளர்கள், தொழில்துறையினர், வணிகர் சங்கங்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை மனுக்களாக வழங்கிட வேண்டுமென சேலம் கிழக்கு மாவட்ட சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் நேற்று முன்தினம் (06.02.2024), திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் திருவல்லிக்கேணி, ஜானி பாட்சா தெருவில், செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி 3 மற்றும் 4 நியாயவிலைக் கடைகளுக்கு திருவல்லிக்கேணி தொகுதி மேம்பாட்டு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்கள். உடன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் (ம) 114வது வட்ட மாமன்ற உறுப்பினர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.

## கேரள முதல்வருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

நிர்ணயித்துள்ளது என்றும், இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

**மாநிலங்கள் பாதிக்க வாய்ப்புள்ளது!**

இரண்டாவதாக, மின் துறை சீரமைப்புகளுக்காக கூடுதல் கடன் பெறுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளின்படி, மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOMs) மொத்த இழப்புக்கு நிதியளிக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையால், நடப்பாண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.17,111 கோடி வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது என்றும், இது இந்த ஆண்டு மாநிலத்தின் நிதி வாய்ப்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்றும், எதிர்காலத்திலும் மாநிலங்களை பாதிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்றாவதாக, ஒன்றிய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2 ஆம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான 33,594 கோடி ரூபாய் முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் மூலம் மாநிலங்களின் நிதித் தன்னாட்சி கடுமையாக குறைக்கப்பட்டுள்ள நேரத்தில். இத்தகைய பாரபட்சமான மற்றும் அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முன்னெடுத்து வருகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20, 000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது என்றும், இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மாநில அரசுகள் எதிர்க்க வேண்டும்!**

மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே ஒன்றிய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒருமித்த கருத்துடைய முற்போக்கான மாநில அரசுகள் இதனை எதிர்க்க வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதில் கேரள அரசின் உறுதிப்பாட்டை தான் முழுமையாக ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பை கேரள அரசுக்கு வழங்கத் தயாராக உள்ளது என்றும், இந்த முக்கியமான சவாலை எதிர்கொள்ள கேரள அரசின் நடவடிக்கைகளோடு, தமிழ்நாடு அரசின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டுமென்று தனது கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு

## காணி பழங்குடி மகளிர் குழுவிற்கு ரூ.25 லட்சம் புத்தொழில் நிதி!

**மதிப்புக் கூட்டப்பட்ட மலையகத் தேன் விற்பனை மூலம் கன்னியாகுமரி மாவட்ட பழங்குடி மக்களை முன்னேற்றும் மகத்தான சாதனை!**

சென்னை, பிப்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு தமிழ்நாடு எஸ்.சி. / எஸ்.டி. புத்தொழில் நிதித் திட்டம் மூலம் கன்னியாகுமரி மாவட்டம் காணி பழங்குடி மகளிர் குழுவின் தேன் விற்பனைக்காக ரூ.25 இலட்சம் வட்டியில்லாக் கடன் வழங்கியது.

இந்த ரூ.25 லட்சம் நிதி உதவி மூலம் காணி பழங்குடி மகளிர் குழு நாஞ்சில் காணி மகளிர் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தை நடத்துகிறது.

இந்த நிறுவனம் பழங்குடி மக்களிடம் இருந்து தேன் மற்றும் மிளகு ஆகியவற்றின் கொள்முதலை அதிகரிக்கவும், விற்பனைக்காக அதன் பேக்கேஜிங் பிரிவு ஒன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது.

காணி பழங்குடி மகளிர் குழு, தற்போது இஞ்சி, மிளகு, முருங்கை ஆகியவற்றின் மணம் வீசக்கூடிய, தனித்துவமான மதிப்புக் கூட்டப்பட்ட தேன் விற்பனையை ஒரு சிறிய வாடிக்கையாளர் தளத்தின் மூலம் செய்துவருகிறது.

மேலும், இணையதளத்தின் மூலம் (THROUGH ONLINE PORTAL) இந்த தேன் விற்பனையை அதிகரித்திடவும் ஆவன செய்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியின் உதவியால், பழங்குடி இன மக்களிடம் இருந்து தேன், இஞ்சி, மிளகு முதலியவற்றின் கொள்முதலை அதிகரித்தும் விற்பனையைப் பெருக்கியும் ஒட்டுமொத்த பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காணி பழங்குடி மகளிர் குழு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நன்றியுடன் போற்றி வருகிறது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. இராசாராம்**
**பிப்ரவரி 8 (2008)**



**சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.**

**பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மதுரவாயல் புதிய பூங்கா!

சென்னை, பிப்.8

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு155, இராமாபுரம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு நிதியின் மூலம் ரூபாய் 1 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம், அங்கன்வாடி கட்டிடம், புதிய பூங்கா, விளையாட்டுத் திடல் சீரமைத்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான துவக்க விழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் (06.02.2024) காலை 11.30 மணியளவில், பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வ குமார், எம்.சி. தலைமையில், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு மேற்கண்ட முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

### 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

### (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| " பிப்ரவரி - 9 | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| " பிப்ரவரி - 10 காலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| மாலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கரூர் |
| " பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# ‘திராவிட மாடல்’ அரசின் தூதுவர்களாக மகளிர் அனைவரும் செயல்பட வேண்டும்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,பிப். 8-

**“திராவிட மாடல் அரசின், நம் முதல்வரின் பிராண்ட் அம்பாசிடராக, முதலமைச்சரின் முகமாக, இந்த அரசின் தூதுவர்களாக மகளிர் அத்தனை பேரும் செயல்பட வேண்டும்,” என்று சென்னையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.**

சென்னை, ஜார்ஜ் டவுன், ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று முன்தினம் காலை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் 731 பயனாளிகளுக்கு 5 கோடியே 63 லட்சத்து 66 ஆயிரத்து 31 ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பாக, அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், மணியம்மையார் நினைவு கைம்பெண் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு மறுமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு கீழும், பெண்கள் மற்றும் திருநங்கையர் நலனுக்கான, பிற திட்டங்களின் கீழும் சுமார் 787 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 67 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

**முதல் உரையே மகளிர் உரிமை துறை!**

அமைச்சர் அக்கா கீதா ஜீவன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், ``இந்தத் தேதியில் இந்த நிகழ்ச்சி நடத்துவதற்கு என்னிடத்தில் தேதி வாங்குவதற்குரிய அந்தப் பொறுப்பை நான் சேகர்பாபு அவர்களிடம் விட்டுவிட்டேன்” என்றார். ஏற்கனவே, அவர் என்னிடம் நிறைய தேதி வாங்குவார். இப்போது மற்ற அமைச்சர்களுக்கும் சேர்த்து, தேதி வாங்க ஆரம்பித்திருக்கிறார்.

அக்கா அவர்கள் சொன்னதைப் போல் சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினராக என்னுடைய முதல் கன்னிப் பேச்சில், என்னுடைய முதல் உரையே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மீதுதான் பேசினேன்.

எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு எனக்கு முழு உரிமை இருக்கிறது. அந்த உரிமையோடுதான் இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த நான்கு திட்டங்களின் பெயரை மட்டும் நீங்கள் இன்னொரு முறை படித்து பாருங்கள். இந்த பெயரை வைத்தே இந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தது, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

**பராசக்தி வசனத்தை திட்டங்களாக்கிய கலைஞரின் பேனா!**

சமுதாயக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி செய்யக்கூடிய எண்ணம் கலைஞர் அவர்களுக்கு முதலமைச்சர் பதவிக்கு வந்த பிறகு ஏற்பட்டதல்ல. தந்தை பெரியாரின் பாசறையில் தங்கிப் பயிற்சி பெற்ற காலத்திலேயே கலைஞருக்கு ஏற்பட்ட அந்த எண்ணத்தால்தான் இப்படிப்பட்ட திட்டங்களை அவர் செயல்படுத்தி இருக்கிறார்.

எந்த கலைஞரின் பேனா, `பராசக்தி' படத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக வசனங்கள் எழுதியதோ, அதே கலைஞரின் பேனாதான் பிற்காலத்தில் அப்படி பாதிக்கப்படுகின்ற பெண்களுக்கு உதவி செய்வதற்காக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றில் கையெழுத்து போட்டது.



பெண்களை முன்னேற்ற பெண்களுக்கு கல்வி, பொருளாதார சுயசார்பு கொடுக்கின்ற எல்லா திட்டங்களும், திராவிட இயக்கத் தலைவர்களின் கொள்கைகளில் இருந்துவந்த திட்டங்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

பெண்கள் பொருளாதார தன்னிறைவு அடைய வேண்டும் என்பதால்தான், மகளிர் சுய உதவி குழுக்களை, நாட்டிலேயே முதன் முறையாக 1989ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள்தான் துவங்கி வைத்தார்.

குடும்ப சொத்தில் பெண்களுக்கு சம உரிமை என 35 வருடத்திற்கு முன்பு, சட்டத்தைத் தீட்டியதும் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். பெண்கள் சமையலறையில் முடங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் `இலவச கேஸ் அடுப்புத் திட்'த்தைக் கொண்டு வந்ததும் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில்தான். விறகு அடுப்பில் சமைக்கும்போது வருகின்ற அந்த புகையால், பெண்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கோளாறுகளைக் குறைக்கத்தான் கேஸ் அடுப்பைக் கொடுத்தார்.

**மகளிரின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள்!**

இப்படி மகளிர் நலனுக்காக கலைஞர் கொண்டுவந்த திட்டங்களையும் அவருடைய சாதனைகளையும் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். அதன் தொடர்ச்சியாகத்தான் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், புதுமைப்பெண் திட்டத்தைக் கொண்டு வந்தார். மகளிர் உரிமைத் தொகை திட்டத்த அறிமுகப்படுத்திருக்கிறார். பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தையும் நம்முடைய தலைவர் அவர்கள்தான் அறிவித்தார். ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில் இத்தனை திட்டத்தையும் செய்து இருக்கிறார். இப்படி அடுக்கடுக்காக மகளிரின் முன்னேற்றத்திற்காக நம்முடைய ஆட்சிக் காலங்களில் கொண்டு வரப்பட்ட திட்டங்களின் விளைவுதான் பெண்கள் இன்றைக்கு பல துறைகளில் முன்னேறி வருகிறார்கள்.

**பெண்களின் எண்ணிக்கையில் 43 சதவிகிதம்!**

இன்னும் சொல்லப்போனால், ஆண்களை விட பெண்கள் இன்றைக்கு அதிகம் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். சில நாட்களுக்கு முன்பு உலகப் புகழ்பெற்ற `நியூயார்க் டைம்ஸ்'பத்திரிகையில், ஒரு கட்டுரை வந்திருக்கிறது.

அந்தக் கட்டுரையில் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்றும், திறன் மிகுந்த மனிதவளம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்றும் பாராட்டி எழுதி இருக்கிறார்கள். அந்தக் கட்டுரையில் இந்தியா முழுவதும் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடிய பெண்களின் எண்ணிக்கையில் 43 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து உருவாகிக்கொண்டிருக்கிறார்கள், என்று அந்தப் பத்திரிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. அதாவது அந்த அளவிற்கு, பெண்களை இங்கே கல்வியறிவு பெற்றவர்களாக, திறன் பெற்றவர்களாக உருவாக்கி வந்து கொண்டிருக்கிறோம்.

இது எதுவோ ஒரே நாளில் தானாக நடந்த விஷயம் அல்ல. நமது கழக அரசு கொண்டு வந்த திட்டங்களால்தான் பெண்கள் இப்போது வேகமாக முன்னேறி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் முதல் முறையாக ஆட்சிக்கு வந்தார். அப்போது கலைஞர் கொண்டு வந்த திட்டம்தான் திருமண உதவித் தொகை திட்டம். எட்டாம் வகுப்பு வரை படித்தால், திருமண உதவித் தொகை திட்டம் என்று தலைவர் அறிவித்தார்.

பெற்றோர்கள் எல்லாம் பெண் குழந்தைகளை எட்டாம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். அதன் பிறகு அந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் மாற்றினார். பத்தாம் வகுப்பு வரை படித்தால்தான் திருமண உதவித்தொகை என்று சொன்னார்.

அதன் பிறகு பெற்றோர்கள் பெண் குழந்தைகளை பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். பெண்கள் குறைந்தது பன்னிரண்டாம் வகுப்பு படித்தால்தான் திருமண உதவித்தொகை என்று கலைஞர் மாற்றினார். அதன் பிறகு, பெண்கள் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்தார்கள். இந்த விதிகளை கலைஞர் அவர்கள் மாற்றினார் அல்லவா, அது உதவி கேட்டு வருகின்ற விண்ணப்பங்களை குறைப்பதற்காக அல்ல, பெண்கள் இன்னும் நிறைய படிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்.

இப்போது அதற்கு அடுத்த கட்டத்திற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு சென்று கொண்டிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்விப் படிப்புக்கு கல்லூரிக்குச் செல்கின்ற அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்று ‘புதுமைப் பெண் திட்டம்’ என்ற பெயரில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரைக்கும் இந்த இரண்டரை வருடத்தில் மட்டும் இரண்டு லட்சத்து 71 ஆயிரம் மாணவிகள் இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்திருக்கிறார்கள்.

பெண்கள் உயர் கல்விப் படிப்பதற்கு பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்ல பெண் பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்ப வேண்டும் என்ற அந்த எண்ணத்தை பெற்றோர்கள் மனதில் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த மேடையில் கூட புதுமைப்பெண் திட்டத்தால் பயனடைகின்ற மாணவிகளுக்கு நம் முதலமைச்சரின் வாழ்த்துக் கடிதங்களை வழங்க இருக்கின்றோம்.

**மகளிர் முன்னேற்றமே சமத்துவ சமுதாயம்!**

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை களைய வேண்டிய கடமை எந்த அரசுக்கும் உண்டு. அந்த வகையில் ஆதரவற்ற பெண்கள், கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெண்கள், கைம்பெண்கள் ஆகியோருக்கு இந்த அரசு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆணாதிக்க நிலையை உடைத்து பெண்களும் ஆண்களும் சரி நிகர் சமம் என்ற உன்னத நிலையை நோக்கி நமது தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற நம் தலைவர்கள் கண்ட கனவாகும். அந்தக் கனவை நோக்கி சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் மகளிர் முன்னேற்றம் என்பது மிக மிக முக்கியம்.

அதற்கு எல்லா வகையிலும் இந்த திராவிட மாடல் அரசு உங்களுக்குத் துணை நிற்கும். அந்தப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்ற நம்முடைய சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு வாழ்த்துகள், பாராட்டுகள்.

மகளிர் மட்டும் அல்ல, திருநங்கையர், திருநம்பியரும் வாழ்வில் முன்னேற்றம் அடைகின்ற அளவுக்கு ஏராளமான திட்டங்களை நம்முடைய கழக அரசு வழங்கி வருகின்றது. இங்கு பயனாளிகளாக வந்திருக்கக்கூடிய அத்தனை மகளிர் மற்றும் திருநங்கையர்க்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் பயனாளிகள் நீங்கள் அத்தனை பேரும் நம்முடைய திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் பிராண்ட் அம்பாசிடராக, முதலமைச்சரின் முகமாக, இந்த அரசின் தூதுவர்களாக நீங்கள் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

காலத்திற்கு ஏற்ப, இன்னும் பல திட்டங்கள் உங்களைத் தேடி வரும் என்ற அந்த உத்தரவாதத்தையும் நான் இங்கே தருகிறேன். இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி உங்கள் அத்தனை பேரையும் சந்தித்ததில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கீதா ஜீவன், தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், துணை மேயர் மகேஷ்குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஐ.ஏ.எஸ், ஆணையர் அமுதவல்லி ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சியர் ரஷ்மிக் சித்தார்த் ஜக்டே ஐ.ஏ.எஸ், துறையின் கூடுதல் இயக்குனர் எஸ்.பி.கார்த்திகா, மகளிர் ஆணையத் தலைவி ஏ.எஸ்.குமாரி, கைம்பெண் மற்றும் திருநங்கை நல வாரிய உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள், மாணவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (06.02.2024) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஜோசப் சாமுவேல், ப. தாயகம் கவி, அ.வெற்றியழகன், துணை மேயர் மு. மகேஷ் குமார், சமூக நலன் மற்றும் உரிமை துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப் பாண்டியன் அறிக்கை!

*புதுக்கோட்டை,பிப். 8-*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*





மாநில உரிமைகளை காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இன்று (8.2.2024-வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணை பெருந்தலைவர்கள், மாவட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக கண்டனக் குரலை எழுப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.



திருச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 ஆவது நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பழனியாண்டி, சேர்மன் துரைராஜ், வழக்கறிஞர் துரை அழகிரி, புத்தூர் தர்மராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கருணாநிதி, ராம்குமார் கண்ணன், செவந்த லிங்கம், மோகன்தாஸ், இளங்கோவன், நாகராஜ், பாலமுருகன், சதீஷ் கருணாமூர்த்தி, சாமி, தாஹிர், முத்துக்குமார், கார்த்தி, சுரேஷ், எம்.ஆர்.எஸ்.குமார் உள்ளிட்ட பகுதிச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.



நாள்
8 – 2 – 2024,
வியாழக்கிழமை,
காலை 9.30 மணி
கலைஞர் 100
1924 - 2024
ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி
சோலார் பகுதிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
இளம் தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சு.முத்துசாமி
வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் / செயலாளர் – ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.
பேரன்புடன்... K.E.பிரகாஷ் B.A., துணைச் செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி
மேற்கு மண்டலம்-5


கலைஞர் 100
1924 - 2023
08.02.2024 காலை 9.00 மணிக்கு
ஈரோடு மாவட்டம், சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை
வருக! வருக! என அன்புடன் வரவேற்கும்...
ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க.



பெரம்பலூர் மாவட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 55ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், வேப்பந்தட்டையில் அமைதி ஊர்வலம் சென்று, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதேபோல் கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், பேரூர் செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், து.ஹரிபாஸ்கர், க.ராமலிங்கம், மகாதேவி ஜெயபால், எ.ரசூல்அகமது, தங்க.கமல், மாவட்டத் தலைவர் கே.கே.எம்.குமார், ரா.சிவா, பாண்டகப்பாடி கணேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா புகைப்படக் கண்காட்சியை நேற்று முன்தினம் (06.02.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், அரசு அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மா. அரவிந்த், மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## போட்டித் தேர்வுகளை அவரவர் தாய்மொழியில் எழுத அனுமதிப்பீர்!

# இந்தியில் மட்டுமே எழுதலாம் எனும் ஒன்றிய அரசின் பிடிவாதமே முறைகேடுகளுக்குக் காரணம்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேச்சு!

புதுடெல்லி, பிப்.8-

நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பொதுத் தேர்வுகள் நேர்மையற்ற வழிமுறை தடுத்தல்) மசோதா, 2024 மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தன் விவரம் வருமாறு:-

நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பொதுத் தேர்வுகள் நேர்மையற்ற வழிமுறை தடுத்தல்) மசோதா, 2024 மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச எனக்கு வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி.

ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள இந்த மசோதா மிக முக்கியமானதாகும். கடந்த காலத்தில் தேர்வுகள் நடந்த போது பல தருணங்களில் நேர்மையற்ற வழிகள் பின்பற்றப்பட்டதால் ஏற்பட்ட குளறுபடி சறுக்கல்களையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த மசோதாவை தாக்கல் செய்துள்ளது.

பொதுவாக நாடாளுமன்றத்தில் அரசு ஒரு மசோதாவை தாக்கல் செய்கிறது என்றால் அந்த விஷயங்கள் தொடர்பாக கடந்த காலத்தில் பல நெருடலான விஷயங்கள் நடந்துள்ளன என்றே அர்த்தம். அந்தக் குளறுபடிகளை முறைகேடுகளை தடுக்கவும், களையவுமே மசோதா கொண்டு வரப்படுகிறது.

இந்தியாவையே உலுக்கிய மிகப் பெரிய ஊழல் முறைகேடு மத்தியப் பிரதேசத்தில் நிகழ்ந்த "வியாபம் முறைகேடு" என்பதை நாடறியும். இந்த மிகப்பெரிய தேர்வு முறைகேடு எப்படி நிகழ்ந்தது? எப்போது நிகழ்ந்தது? யார் யாருக்கு இதில் பங்குண்டு? அப்போது இந்த அரசு வாய்மூடி மௌனமாக இருந்தது.

அதற்குப் பிறகு தேசிய அளவிலான நீட், யுபிஎஸ்இ போன்ற நுழைவு/போட்டித் தேர்வுகள் நாடெங்கும் நடந்தது. மேலும் பல தருணங்களில் போட்டித் தேர்வு நடக்கும் கட்டடங்களின் மீதேறி ஜன்னல்கள் வழியே தேர்வெழுதுவோருக்கு நேர்மையற்ற வழியில் எவ்வாறெல்லாம் விடைகளை சொல்லியும், காகிதத்தில் விடைகளை எழுதி தந்த முறைகேடுகள் சம்பவங்களை செய்தித்தாள்களில் படங்கள் வெளியானதைக் கண்டோம்.

அப்போதும் இந்த அரசு மௌனமாகவே இருந்தது. அதற்குப் பிறகு இத்தனை ஆண்டுகள் கழித்து பிறகு ஏறக்குறைய 1.5 இலட்சம் பேர் தேர்வு முறைகேடுகளில் தங்கள் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். இந்த அரசு முதலில் இப்படிப்பட்ட தேர்வு முறைகேடுகள் நிகழ்வதற்கான மூலகாரணத்தைக் கண்டறிய வேண்டும்.

இந்தமாதிரியான தேர்வு முறைகேடுகளைத் தடுப்பது எப்படி இந்தக் குற்றங்களுக்கு தீர்வு காணும் வழிகள் குறித்து அரசு ஆராய வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதற்கான வழிமுறைகள் குறித்து இந்த மசோதாவில் ஒன்றிய அரசு எதுவும் குறிப்பிடவில்லை.

இந்த மசோதா முழுவதும் தேர்வு முறைகேடுகள் செய்வோரை எப்படி தண்டிப்பது, சிறையில் அடைப்பது அபராதம் விதிப்பது குறித்து மட்டுமே கருத்தில் கொண்டுள்ளதே தவிர இந்த முறைகேடுகளைத் தடுப்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

உதாரணமாக இத்தகைய குற்றங்கள் நிகழக் காரணம் என்ன? யார்



இதைச் செய்கின்றனர். எதற்காக இப்படி செய்கின்றனர். பணத்துக்காக கும்பலாக ஒன்று சேர்ந்து மோசடி செய்கிறார்களா? அதற்கான தீர்வுகளை முன்வைக்க இந்த மசோதா தவறிவிட்டது. ஒரு முறைகேடு நடப்பதற்கான மூலக்காரணத்தை அறிந்து தீர்வுகள் காண்பது அரசின் கடமையாகும்.

தேர்வர்கள் இந்த முறைகேடுகளில் ஈடுபடுவது எதனால் என்று பார்த்தால் தேர்வர்கள் இம்மாதிரியான போட்டித் தேர்வு எழுதுவதற்கு தங்களை தயார் படுத்திக் கொள்ளாதது ஒரு காரணம். மற்றொரு காரணம் எது உந்துகிறது என்பதே. மொழிப் புலமை இல்லாமல் போனதும் கூட ஒரு காரணம் ஆகும். தேர்வர்கள் அவரவர் தாய் மொழியில் தேர்வுகளை எழுத வாய்ப்பு அளித்தால் இந்த முறைகேடுகள் நடக்காமல் தடுக்க முடியும். ஆனால் ஒன்றிய அரசு தனது இந்தி மொழி கொள்கையில் பிடிவாதமாக உள்ளது. இந்த தேர்வுகள் இந்தியில் தவிர்த்து வேறு எந்த இந்திய மொழிகளிலும் எழுத முடியாது போனதும் ஒரு காரணம். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, இன்னும் பல மாநிலங்களில் மாநில கல்வி முறையில் பயின்றோர் அவரவர் மாநில மொழிகளில் எழுத அனுமதித்தால் இந்த தேர்வு முறைகேடுகள் நிகழாமல் தடுக்கலாம். இந்தி மொழியில் எழுத வேண்டும் என்றால் அவர்களால் சரியாக எழுத முடிவதில்லை.

மேலும் ஒன்றிய அரசு இதற்காக ஒரு முழுமையான திட்டம் தயாரிக்க வேண்டும். மாநில அரசுகளுடன் இணைந்து அத்திட்டத்தை செயலாற்ற வேண்டும். தேர்வர்களை ஈர்த்து அவர்களுக்கு நுழைவுத் தேர்வுகள் போட்டித் தேர்வுகள் எழுதுவதற்கு எப்படி தயாராக வேண்டும் என்று நல்ல வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி அங்கு தேர்வுக்கு தேவையான பயிற்சிகளை அளிக்க வேண்டும். அப்போது தானாகவே இது போன்ற முறைகேடுகள் செய்வதை தேர்வர்கள் தவிர்த்து தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுத முடியும். ஆனால் இதையெல்லாம் இந்த அரசு செய்ததா? இல்லை.

நாட்டில் யுபிஎஸ்இ அல்லது ரயில்வே பணி வேலைக்கான அல்லது எந்த வேலைக்கான போட்டித் தேர்வுகளுக்கு தயார்ப்படுத்த தேர்வர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி தருவது மிக அவசியம். ஆனால் இதெல்லாம் ஒன்றிய அரசு செய்ததா? என்றால் எதுவும் செய்யவில்லை. ஆனால் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதில் மட்டும் கவனம் செலுத்துகிறது. குற்றமோ முறைகேடுகளோ செய்வோரைத் தண்டிப்பது சரியே. ஆனால் போட்டி தேர்வுகள் எழுதுவோருக்கு உதவியாக ஒன்றிய அரசு என்னென்ன செய்துள்ளது. எங்கெங்கு பயிற்சி மையங்கள் அமைத்து பயிற்சி அளித்துள்ளது.

அதைப் பற்றி எல்லாம் இந்த மசோதாவில் எதுவும் குறிப்பிடவில்லை. இதுதான் இந்த மசோதாவிலுள்ள குறை.

மாநிலங்கள் மேற்கொண்டு வரும் தேர்வு பயிற்சி முறைகள் திறன் மேம்படுத்துதல் குறித்து பேசும் போது தமிழ்நாட்டில் செய்யப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு யு.பி.எஸ்.இ. போன்ற போட்டித் தேர்வுகள் எழுதும் தேர்வர்களுக்கு இத் தேர்வுகளில் சிறப்பாக எழுத பல உதவித் திட்டம் வகுத்துள்ளது. யுபிஎஸ்இ தேர்வு எழுதும் தேர்வர்களுக்கு தலா ரூ.7000 வரை செலவு செய்து சிறப்பு பயிற்சி மையங்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

நேர்முகத் தேர்வுக்கு செல்லும் போது ரூ.25,000 வழங்கி ஊக்கப்படுத்தி உறுதுணையாக இருக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இன்னொரு முக்கியமான திட்டம் "நான் முதல்வன்" திட்டமாகும். நான் முதல்வன் என்பது நான் வெற்றியாளர் என்பதை குறிக்கும் சிறப்பு திறன் மேம்பாட்டு திட்டமாகும்.

இத்திட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் படித்து போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு நகரத்தில் பல்கலைக் கழகங்கள் கல்லூரியில் பயின்ற மாணவர்களுடன் கலந்து பேசி கற்கவும் தங்களது மொழி மற்றும் அறிவார்ந்த திறன்களை மேம்படுத்தி நகரத்து மாணவர்களுக்கு இணையாக அவர்களை மாற்ற வழிவகை செய்கிறது.

இதனால் இத் தேர்வர்கள் தாழ்வு மனப்பான்மை இன்றி தைரியமாக தன்னம்பிக்கையுடன் போட்டித் தேர்வுகளை அணுக முடியும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை மேம்படுத்தி மொழித்திறனை வளர்த்து போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் தேர்வர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது. இதுவே இத்திட்டத்தின் வெற்றி ஆகும்.

தேர்வுகளில் முறைகேடுகள் நிகழாமல் தடுக்க தேர்வர்களின் மொழிப் பிரச்சினையை அகற்ற ஒன்றிய அரசு தீர்க்க வேண்டும். மேலும் இந்த முறைகேடுகளைத் தடுக்கவும் தவறிழைத்தவர்களை கண்டுபிடித்து விசாரித்து தண்டிக்கவும் தேசிய அளவிலான உயர் அதிகாரமிக்க குழு ஒன்றை ஒன்றிய அரசு ஏற்படுத்த இந்த மசோதா பரிந்துரைக்கிறது.

ஆனால் இந்த உயர் அதிகார குழுவில் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் இடம் பெறுகின்றனரா? இதில் மாநில அரசின் பங்கு என்ன? என்பது குறித்து இந்த மசோதாவில் எதுவும் கூறப்படவில்லை. இதனால் இம்மசோதா சட்டமான பிறகு இச்சட்டத்தை பயன்படுத்தி ஒருசிலர் பழிவாங்குவதையோ பாரபட்சமாக நடப்பதையோ தடுக்க முடியாது.

எனவே இந்தக் குழுவில் மாநில அரசின் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும். மாநில அரசிடம் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் இது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் இந்த விஷயத்தில் மாநிலங்களை இணைத்து செயல்பட வேண்டும்.

போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் வாயிலாக சிறப்பு பயிற்சி அளித்து தாய் மொழிப் புலமையை வளர்த்து அவரவர் தாய் மொழியில் தேர்வு எழுதச் செய்தால் இந்த தேர்வு முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்கலாம்.

போட்டித் தேர்வு எழுதுவோருக்கும் உள்ள அச்சத்தை போக்க வேண்டும். வெளிநாடுகளில் இது போன்ற தேர்வு முறைகேடுகள் நிகழ்வதில்லை. ஏனென்றால் அவர்கள் தொழில்நுட்பத்தை புகுத்தி தேர்வுகளில் முறைகேடுகள் நடப்பதைப் தவிர்த்து விடுகின்றனர்.

இந்த மசோதாவில் திருத்தங்கள் செய்திட பரிந்துரைத்து திருத்தங்கள் செய்ய வேண்டும். ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் மாநிலத்தின் குரல்களுக்கு மதிப்பளித்து மாநிலங்களோடு இணைந்து பணியாற்றி போதுமான நிதி, நேரம் செலவிட்டு வருங்கால இளைய சந்ததியினர்க்கு உறுதுணையாக நின்று ஊக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேசினார்.

## 26 ஆண்டுகளுக்கு மேல் சிறைகளில் தண்டனை அனுபவித்து வரும்

# 12 ஆயுள் தண்டனைக் கைதிகள் முன் விடுதலை!

## அறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, பிப்.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.9.2021 அன்று ஆற்றிய உரையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்த நாளான 15.9.2021 அன்று நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து வரும் 700 ஆயுள் தண்டனை கைதிகளின் தண்டனை காலத்தை குறைத்து நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் முன்விடுதலை செய்திட இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக ஆயுள் தண்டனை பெற்று 10 முதல் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர்களின் தண்டனைகளை குறைத்து, அவர்களை முன்விடுதலை செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்திட 11.1.2022 அன்று ஓய்வுபெற்ற நீதிபதி என். ஆதிநாதன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அக்குழுவின் பரிந்துரைப்படி, கடலூர் மத்திய சிறையிலிருந்து 4 கைதிகளும், கோவை மத்திய சிறையிலிருந்து 6 கைதிகளும், வேலூர் மத்திய சிறையிலிருந்து ஒரு கைதியும், சென்னை புழல் சிறையிலிருந்து ஒரு கைதியும், என மொத்தம் 12 ஆயுள் தண்டனை கைதிகளை நிபந்தனை அடிப்படையில் முன்விடுதலை செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு 55வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ப.முருகமணி, ஞான. இமையநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், ஹர்சத், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன் நகர்மன்ற துணைத்தலைவர் எஸ்.எஸ்.குமார் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பொ. வேதாசலம்

**பிப்ரவரி 8 (1982)**



தந்தை பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழக உறுப்பினரானார். பின்னர் கழகம் துவங்கியபோது, அந்தநாள் முதல் இறுதி வரை கழக உறுப்பினராக விளங்கினார்.

மாதவரம் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

மூலக்கடை, மாதவரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் கழகம் வளர்த்தவர். மிசா சிறைவாசம் உட்பட பத்து முறை சிறைக்கு சென்றவர்

"சிரித்துக்கொண்டேயிருக்கும் முகம்! குள்ள உருவம்! எளிய தோற்றம்! நிமிர்ந்த நோக்கு! சின்னத் தேர் ஒன்று அசைந்து வருவது போன்ற அமைதியான நடை" என தலைவர் கலைஞர் அவர்கள் மாதவரம் வேதாசலம் மறைந்தபோது அந்தோ! மாதவரம் வேதா! என கலைஞர் கடிதத்தில் சிறப்பித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கர்நாடக மாநில முன்னாள் கழக அமைப்பாளர்

# கி.சோழன் துணைவி ருக்குமணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



பெங்களூரு, பிப்.8-

கர்நாடக மாநில தி.மு.க.வின் மூத்த உறுப்பினரும், முன்னாள் மாநில கழக அமைப்பாளருமான கி.சோழனின் துணைவியார் திருமதி. ருக்குமணி சோழன் திங்களன்று உடல் நலிவுற்று அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

தகவலறிந்து மாநில இலக்கிய அணி போர்முரசு கதிரவன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதிச் சடங்கு சிவாஜி நகரில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

**பிப்ரவரி 8 (2009)**



தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் "கோட்டை அமீர்" விருது வழங்கினார்.

தலைமைக் கழகச் சார்பில் 2004ஆம் ஆண்டு "கலைஞர் விருதி'னை தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## குடிசையில்லாத் தமிழ்நாட்டை உருவாக்க முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த திட்டம்!

# தமிழ்நாடு முழுவதும் ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 15,000 புதிய குடியிருப்புகள்!

## நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை, பிப். 8 -**

**யானைக்கவுனி கல்யாணபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், ரூ.44.91 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 புதிய குடியிருப்புகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு புதிய குடியிருப்புகளை பயனாளிகளிடம் வழங்கி சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாக. 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 288 வீடுகளை உங்களிடத்தில் ஒப்படைக்கின்ற விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகள்.

### சொந்த வீடு என்ற கனவு!

மனிதனாக பிறக்கும்போது எல்லோருக்குமே ஒரு பெரிய கனவு இருக்கும். அது என்ன கனவு என்றால், நமக்கென்று ஒரு சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற கனவுதான். அதுவும் சென்னை போன்ற பெரு நகரங்களில் உழைக்கும் மக்கள் தங்களுடைய வருவாயின் பெரும் பகுதியை வீட்டு வாடகை கொடுப்பதற்காகச் செலவிட வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதையெல்லாம் குறைக்கத்தான் இன்றைக்கு பல குடியிருப்புகளை நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து கட்டிக்கொண்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இதற்கெல்லாம் அடித்தளமிடும் விதமாக இந்தியாவிலேயே முதன்முறையாக 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பித்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

54 ஆண்டுகளுக்கு முன்பே குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இந்தப் பணியை ஆரம்பித்தார் கலைஞர் அவர்கள். அதனை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுக்கொண்டிருக்கிறார்.

இந்த பெயர் வித்தியாசத்திலேயே நீங்கள் புரிந்து கொள்ளலாம். குடிசைகள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த வாரியத்திற்கு `குடிசை மாற்று வாரியம்' என்று பெயர் வைத்து ஆரம்பித்தார்கள். அந்த லட்சியத்தின்படி, கீற்றுகளையும், தார் பாய்களையும் கூரைகளாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு கான்கிரீட் அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டித் தந்தவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### `தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்'

இன்றைக்கு அந்த குடியிருப்புகளை மேம்படுத்துகின்ற விதமாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லும் நோக்கில் நம் முதலமைச்சர் அவர்கள் `தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என பெயர் மாற்றம் செய்து மேம்படுத்தி வருகின்றார். அதில் ஒன்றுதான் இங்கு இருக்கக்கூடிய கல்யாணபுரம் குடியிருப்புத் திட்டம். இதுவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974ஆம் ஆண்டு கட்டப்பட்டதுதான்.

அப்போது கட்டப்பட்ட வீடுகள் பழுதாகி, பழையதாகிவிட்டன என்றும், அவற்றுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என்றும் நீங்கள் கோரிக்கை வைத்திருந்தீர்கள். இங்கே இருந்தது 254 வீடுகள். ஆனால், இன்றைக்கு இந்த அரசு உங்களுக்குக் கட்டித்தருவது 288 வீடுகள். அதாவது 34 வீடுகள் கூடுதலாக கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

கூடுதலாக கட்டிக் கொடுக்கிறோம் என்பதற்காக வீட்டின் சதுர அடியை குறைக்கவில்லை. ஏற்கெனவே இருந்த வீடுகளின் அளவு 326 சதுர அடி, ஆனால், கழக அரசு இப்போது கட்டிக் கொடுத்திருப்பது 412 சதுர அடியில். எனவே முன்பை விட பெரிய வீடாகவே கட்டிக் கொடுத்திருக்கிறோம்.



சென்னை, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரம் திட்டப் பகுதியில் ரூ.44.91 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 288 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (06.02.2024) திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

எந்த நன்மையையும் அதிகமாகத் தருவதுதான் நம் திராவிட மாடல் அரசின் சாதனை என்பதற்கு, இந்த `கல்யாணபுரம் திட்டம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் கடந்த அக்டோபர் மாதம் சென்னையில் திரு.வி.க நகர், பெரியார் நகர் போன்ற இடங்களில், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 516 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆயிரம் குடியிருப்புகளை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினோம். அதற்கான பணிகளும் நடந்துக் கொண்டிருக்கின்றன. விரைவில், அதையும் கட்டி முடித்து திறக்க இருக்கின்றோம்.

### 2,400 கோடி ரூபாயில் 15,000 குடியிருப்பு

என்னுடைய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியிலும் இதேபோன்ற நான்கு திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதையும் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அதையும் விரைவில் கட்டிமுடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சென்னை மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 15 ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டும் பணியை நம் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கின்றேன்.

நம் தேர்தல் அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் பழுதடைந்த பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகளை அதே இடத்தில் கட்டித் தருவோம் என்று வாக்குறுதி வழங்கினார்கள். சொன்னதைச் செய்கின்ற விதமாக இன்றைக்கு புதிய குடியிருப்புகளைக் கட்ட அடிக்கல் நாட்டியும் வருகின்றோம்.

ஏனென்றால், இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை இவை மூன்றும்தான் மனிதர்களுக்கு மிக, மிக அத்தியாவசியம், மிக, மிக முக்கியம். அதில் முதலாவது இருக்கக்கூடியது இருக்க இடம். அதாவது வீடு என்பதை உறுதி செய்கின்ற வகையில், நம் திராவிட முன்னேற்ற கழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

### வீட்டிற்கு நீங்கள்தான் பொறுப்பு

இந்த 254 வீடுகளை நம் அரசு உங்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறது என்றால், இனிமேல் அது உங்களுடைய வீடு. உங்களுடைய வரிப் பணத்தில் கட்டப்பட்ட வீடு. எப்படி உங்கள் சொந்த முயற்சியிலோ, கடன் வாங்கியோ அல்லது நகைகளைவிற்றோ வீடுவாங்குகிறீர்களோ அதேமாதிரிதான் இந்த வீடும். இந்த வீட்டிற்கு இனிமேல் நீங்கள்தான் முழுப் பொறுப்பு.

உங்களுக்கென்று நீங்கள் ஒரு சங்கத்தை தொடங்க வேண்டும். சென்னையில் இருக்கக்கூடிய பல அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இருப்பதைபோல் குடியிருப்போர் நலச்சங்கம் அசோசியேஷன் தொடங்க வேண்டும். உங்களுடைய சொந்த வீடு, அதை நீங்கள் எப்படி பராமரித்துக் கொள்ள வேண்டும். எப்படிப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது உங்களுக்குத்தான் தெரியும்.

அந்த சங்கத்தின் மூலம் உங்களின் இந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் தேவைகளை, பிரச்சினைகளை மாநகராட்சி மற்றும் அரசுத் துறைகளின் மூலமாக சரிசெய்து கொள்ளவேண்டும். உங்களுடைய வீடு மட்டுமின்றி, சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று, உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

### விட்டுக்கொடுத்து வாழ வேண்டும்

முக்கியமாக, நீங்கள் அத்தனைப் பேரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு ஏதாவது ஒன்று என்றால், நீங்கள்தான் போய் நிற்க வேண்டும். அப்போதுதான் உங்களுக்கு ஒன்று என்றால் பக்கத்து வீட்டுகாரர் வந்து நிற்பார்.

ஏனென்றால், நாம் தமிழ்நாட்டு மக்கள், அந்த உணர்வோடு நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். புதிய வீட்டில் உங்களுடைய கனவுகள் அனைத்தும் வெல்லட்டும். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் புத்தாடை, 25 கிலோ அரிசி, ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள், அதற்குமேல் ஊக்கத்தொகை என்று அண்ணன் சேகர்பாபு அவர்களும், அண்ணன் தயாநிதி மாறன் அவர்களும் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

எப்போதும் போல நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம் கழக அரசும், அனைத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் மக்களோடு மக்களாக உங்களோடு நிற்போம் என்பதை கூறிக்கொண்டு, அனைவருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்."

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற, இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., சென்னை துணை மேயர் மகேஷ்குமார், வீட்டு வசதித்துறைச் செயலாளர் சமயமூர்த்தி , நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பிரபாகரன், இணை மேலான்மை இயக்குநர் டாக்டர் விஜய கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., உள்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---

## நாடாளுமன்றத் தேர்தல் 2024 “நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு”

# சேலம் மாவட்டத்திற்கு பிப்ரவரி 11ஆம் தேதி வருகை!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு

*நாமக்கல், பிப். 8-*

*நாடாளுமன்றத் தேர்தல் 2024 “நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு” சேலம் மாவட்டத்திற்கு (பிப்ரவரி 11ஆம் தேதி) வருகை தர உள்ளது.*

*இது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.*

*அந்த அறிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவானது கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க உள்ளார்.*

*அதன்படி (பிப்ரவரி 11ஆம் தேதி) காலை 10.00 மணிக்கு சேலம், ரேடிசன் ஹோட்டலிற்கு (Radisson Hotel) வருகை தர உள்ளனர். எனவே நாமக்கல் நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம், தமிழ்நாடு கோழி பொருட்கள் ஏற்றுமதி சங்கம், லாரி உரிமையாளர்கள் சங்கம், லாரி ஓட்டுனர் சங்கம், லாரி பாடிபில்டர் சங்கம், பால் உற்பத்தியாளர்கள் சங்கம், விசைத்தறி நெசவாளர்கள் சங்கம், விவசாய முன்னேற்ற சமூக சங்க கூட்டமைப்பு, பழங்குடியினர் நல மக்கள் மற்றும் வளர்ச்சி சங்கம், சிறு, குறு விவசாயிகள் சங்கம், வணிகர் சங்கங்கள், விவசாயி களின் பிரதிநிதிகள், தொழில் முனைவோர், தொழிற்சங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் தங்களது நிறுவனம்/ தொழில் அமைப்புகள் / சங்கங்கள் தொடர்பான ஒன்றிய அரசின் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கை மனுக்கள் மற்றும் ஆலோசனைகளை தேர்தல் அறிக்கை குழுவினரிடம் நேரிலோ, கடிதம் மூலமாகவோ அல்லது கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*





நாகை மாவட்டம் நாகையில் பாரதி மார்க்கெட் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு 55ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் நாகை நகரக் கழகச் செலயாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

*கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:*

*தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு, அண்ணா அறிவாலயம், எண்.367/369, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை600 018.*

*மின்னஞ்சல் முகவரி: dmkmanifesto2024@dmk.in*

*தொலைபேசி எண்: 08069556900*

*வாட்ஸ்அப்: 90432 99441*

*ட்வீட் : #DMKManifesto2024*

*பேஸ்புக் பக்கம் : DMK Manifesto2024*

*இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்துள்ளார்.*

---

## தி.மு.க. 15ஆவது பொதுத் தேர்தல்

# கடலூர் மேற்கு மாவட்டம்

### நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

**“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக்முகைய்தீன் (எ) சித்திக் அவர்கள் மறைவெய்திய காரணத்தால் கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, பிப்ரவரி 6 (செவ்வாய் கிழமை) அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;**

**கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத் தலைவர் பொறுப்புக்கு ஜே. முசாதிக்அலி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,**

**கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக**

**திரு. ஜே. முசாதிக்அலி,**

எண். 32, முஸ்லிம் கருமார தெரு, நெல்லிக்குப்பம் - 607 105,
பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

**அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 6.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி மற்றும் மாநகர இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணியின்

# இரண்டாவது மாநில மாநாட்டு தீர்மானத்தின் விளக்க தெருமுனை பொதுக்கூட்டமானது



மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திரு. **வில்சன் மணித்துரை** அவர்கள்
மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் திரு. **மாயா** அவர்கள், **L.முகமது மீரான், K.மைக்கேல்** அவர்கள், **M.சபி முகமது** அவர்கள், **பி.எம்.சரவணன்** அவர்கள்,
மாநகர இளைஞரணி அமைப்பாளர் திரு. **கருப்பசாமி கோட்டையப்பன்** அவர்கள்,
மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் திரு. **அலிஃப்மீரான்** அவர்கள், திரு. **அன்பழகன் (எ) ரவி** அவர்கள், திரு. **செல்வம்** அவர்கள், திரு. **இனியன்** அவர்கள், திரு. **குருஜெசி** ஆகியோர் தலைமையில்,
மாநகர துணைச்செயலாளர் திரு.**வி.எஸ்.அப்துல் கையூம்** அவர்கள், பகுதி செயலாளர்கள் தச்சை திரு.**பூ.சுப்பிரமணியன்** அவர்கள், பாளை. திரு. **அன்டன் செல்லத்துரை** அவர்கள், நெல்லை பேட்டை திரு. **இரா.நமச்சிவாயம் (எ) கோபி** அவர்கள், மேலப்பாளையம் திரு. **செ.சாகுல் ஹமீது** ஆகியோர் முன்னிலையில்
மாண்புமிகு. நிதி & மனிதவள மேம்பாட்டுத்துறை மற்றும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர்
மாண்புமிகு. **தங்கம் தென்னரசு** அவர்களின் அறிவுறுத்தலின்படி
நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள் மற்றும்
தலைமை கழக பேச்சாளர்கள் செல்வி. **சேலம் சுஜாதா,** திரு. தூத்துக்குடி **சரத் பாலா,** திரு. **கவிஞர் மூர்த்தி,** திரு. **நெல்லை முத்தையா,** திரு. **மைக் மணி,** திரு. **திராவிட மணி,** திரு. **பாம்பு கிருஷ்ணன்** ஆகியோர் சிறப்புரை

## – நெல்லை மாநகர கழக செயலாளர் திரு.சு.சுப்பிரமணியன் அறிவிப்பு

| வ. எண் | தேதி / நாள் | நேரம் | பகுதி | இடம் | தலைமை கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 01. | 07-02-2024 புதன்கிழமை | மாலை 5.30 | பாளையங்கோட்டை | பொன்னம்மாள் திருமண மண்டபம் அருகில் M.K.P. நகர் | செல்வி.சேலம் சுஜாதா திரு.திராவிட மணி |
| 02. | | மாலை 6.30 | | பேருந்து நிலையம் அருகில் சமாதானபுரம் | |
| 03. | | இரவு 7.30 | | கோபாலசாமி கோவில் அருகில், பெருமாள் கீழரதவீதி தெற்கு பஜார் | |
| 04. | 09-02-2024 வெள்ளிக்கிழமை | மாலை 5.30 | தச்சநல்லூர் | சிந்துப்பூந்துறை | திரு.நெல்லை முத்தையா திரு.மைக் மணி |
| 05. | | மாலை 6.30 | | முத்துமாரியம்மன் கோவில் அருகில், P.V.T. தியேட்டர் | |
| 06. | | இரவு 7.30 | | காந்திசிலை அருகில் தச்சநல்லூர் | |
| 07. | 10-02-2024 சனிக்கிழமை | மாலை 5.30 | மேலப்பாளையம் | மேலப்பாளையம் பஜார் திடல் | திரு.கவிஞர் மூர்த்தி திரு.பாம்பு கிருஷ்ணன் |
| 08. | | மாலை 6.30 | | கொட்டிக்குளம் பஜார் மேலப்பாளையம் | |
| 09. | | இரவு 7.30 | | மண்டல அலுவலகம் முன்பு மேலப்பாளையம் | |
| 10. | 12-02-2024 திங்கள்கிழமை | மாலை 5.30 | நெல்லை பேட்டை | மீனாட்சி தியேட்டர் அருகில், பேட்டை | திரு. தூத்துக்குடி சரத் பாலா திரு.நெல்லை முத்தையா |
| 11. | | மாலை 6.30 | | மல்லிமால் தெரு, பேட்டை | |
| 12. | | இரவு 7.30 | | மாநகராட்சி தொடக்க பள்ளி அருகில் பழையபேட்டை. | |
| 13. | 13-02-2024 செவ்வாய் கிழமை | மாலை 5.30 | | திருப்பணி முக்கு திருநெல்வேலி டவுண் | திரு. தூத்துக்குடி சரத் பாலா திரு.மைக் மணி |
| 14. | | மாலை 6.30 | | சாலியர் தெரு திருநெல்வேலி டவுண் | |
| 15. | | இரவு 7.30 | | கூலக்கடை பஜார் திருநெல்வேலி டவுண் | |

**சு.சுப்பிரமணியன் B.E., MBA., LLB., செயலாளர் - நெல்லை மாநகர திமுக**



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.




தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (7.2.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



ஸ்பெயினிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து இல்லம் வரை வழிநெடுக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்ட காட்சி!







**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.**



56

# இடம் பொருள் கலைஞர்





# கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்!

## சென்னையின் தாகம் தீர்த்த சாதனை

*1996 அக்டோபர் 16-ஆம் தேதியிட்ட 'தமிழரசு' இதழ் வெளியிட்ட கட்டுரைகளில் ஒன்று இப்படி ஆரம்பிக்கிறது:*

*"சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள், திரைப்படங்களில்கூடக் காட்டுவதற்கு யோசிக்கப் போகிறார்கள். சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட்களுக்கு மேலும் தங்கமுடியும்!"*

*படிக்கும்போதே விந்தையாக இருக்கிறது அல்லவா? சென்னைக்கு 90 களில் இப்படி ஒரு முகம் இருந்தது என்பது, இன்று வரலாறாகிவிட்ட தகவல். அதற்கு முக்கிய காரணம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்.*

### எல்லீஸ் யோசித்த திட்டம்

*உலகில் லண்டனுக்கு அடுத்து, மாநகராட்சி அமைந்தது சென்னையில்தான். அந்தச் சென்னை மாநகரத்துக்கென்று நிறையப் பெருமைக்குரிய விஷயங்கள் உண்டு. ஆனால், வெகுகாலம் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்தது.*

*1881-இல் சென்னை நகரம், சுமார் 5 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. அன்று நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்கு, சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக இருந்த கர்னல் டபிள்யூ.எம்.எல்லீஸ் என்பவர், கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குத் திருப்பிவிடத் திட்டமிட்டார். ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.*

*அதன் பிறகு, 1947-1953 காலகட்டத்தில், கிருஷ்ணா-பெண்ணாறு நதித் திட்டம் என்ற பெயரில், ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட 'கோஸ்லா ஆணையம்', இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது.*

### முதல் குரல்... முதல் கடிதம்..!

*பிறகு 1961 வாக்கில், ஒன்றிய அரசின் 'குல்காட்டி ஆணையத்திடம்', விவசாயிகள் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை தமிழ்நாடு அரசு விடுத்தது. அந்தக் கோரிக்கைக்காக ஒன்றிய அரசை தமிழ்நாடு வலியுறுத்திக்கொண்டிருந்த நிலையில், 1963 ஆம் ஆண்டு, 'மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன' என்று மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.*

*ஆனால், அந்த முயற்சியும் கைவிடப்பட்ட நிலையில், 1969 ஏப்ரல் மாதம், கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம், கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை, என்ற ஒரு காரணத்தைச் சொல்லி தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு, 'இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் தர வேண்டும்' என்று கூறியது. அந்த நேரத்தில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும்' என்று அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எழுப்பியதுடன், இதுதொடர்பாக, முதல் கடிதத்தையும் ஒன்றிய அரசுக்கு எழுதினார்.*

*அதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டுப் பிப்ரவரியில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்குவது பற்றி அறிவித்தார். அதன் பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட, ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.*

### வட்டியும் 'இன்ட்ரஸ்ட்'டும்

*இந்நிலையில், 1983-இல் சென்னையில் ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்க, அந்த ஆண்டு ஏப்ரல் 27 அன்று தமிழ்நாடு அரசும், ஆந்திரா அரசும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தின. அதுதான் தமிழ்நாட்டில், 'கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்' என்றும், ஆந்திராவில் 'தெலுங்கு கங்கைத் திட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. 1985 வரை, ஆந்திராவுக்கு 47 கோடி ரூபாயை தமிழ்நாடு வழங்கியபோதும், அந்தத் திட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை.*

*பிறகு 1989-இல் கலைஞர் அரசு அமைந்தவுடன், அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி.ராமாராவை சந்தித்து, கலைஞர் பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து 1990 ஜூலை வரை, மொத்தம் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்துக்காக ஆந்திர அரசிடம் வழங்கினார்.*

*அப்படியான ஒரு சந்திப்பின் போது, பத்திரிகையாளர்களிடையே கலைஞர் பேசும்போது, "அவர்கள் (அ.தி.மு.க) 3 ஆண்டு காலமாக எந்தப் பணமும் கொடுக்கவில்லை. இப்போது நாங்கள் 60 கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறோம். 92-93 ஆம் ஆண்டிற்குள், திட்டமானது முடிவடையக் கூடிய விதத்தில் மீதித் தொகையும் தரப்படும். 3 ஆண்டுக்கான பாக்கியை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று என்.டி.ஆர். வற்புறுத்தாததற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையாகும்" என்று சொன்னதும், பத்திரிகையாளர் ஒருவர், "பாக்கிப் பணம் 'இன்ட்ரஸ்ட்' (வட்டி) உடன் தரப்படுமா?" என்று கேட்க, அதற்கு கலைஞர், "இந்தத் திட்டம் மக்களின் 'இன்ட்ரஸ்ட்' (நன்மைக்காக) உடன் செய்யப்படுகிறது" என்றார்.*

*இந்நிலையில், 1991 கலைஞர் அரசு கலைக்கப்பட, அதற்குப் பிறகு வந்த அரசு எந்த நடவடிக்கையும் இதில் எடுக்கவில்லை. மீண்டும் 1996-இல் கலைஞர் அரசு அமைந்ததும், அன்றைய ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.*

*அதன் பலனாக, 1996 செப்டம்பர் 29 அன்று, ஆந்திரா எல்லையைக் கடந்து, தமிழ்நாட்டின் எல்லையான ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் கிராமத்துக்குக் கிருஷ்ணா நதி வந்தடைந்தது. சென்னையின் தாகம் தணிந்தது!*

**...வலம் வருவோம்**

### திராவிட கங்கைத் திட்டம்!

என்.டி.ஆர் உடனான பேச்சுவார்த்தை முடிந்து, அவருடன் கலைஞரும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, "இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்தில் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இதற்குப் பெயர் தெலுங்கு கங்கைத் திட்டம் என்றிருந்தாலும், 'திராவிட கங்கைத் திட்டம்' என்பதே மிகவும் பொருத்தமானதாகும்" என்றார் கலைஞர்.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த, 2006-ஆம் ஆண்டு, 'தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும்' என்று அன்றைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்கு கடிதம் எழுதினார் கலைஞர். ஆனால், கண்டலேறு கால்வாய் பழுது பட்டிருந்தது. எனவே, ஆந்திர மாநிலப் பகுதியில் அதைச் சீரமைக்க, புட்டபர்த்தி சாய்பாபா நிதி உதவி வழங்கினார். அதற்காக 2007-இல் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார் கலைஞர்.

### நம்பிக்கை பிறக்கிறது!

ஒவ்வொரு விளிம்புநிலை சமூகங்களுக்கும் பார்த்துப் பார்த்து இட ஒதுக்கீட்டைப் பரவலாக்கியவர் கலைஞர். மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனிப்பிரிவை உருவாக்கியது, அருந்ததியருக்கான உள் இட ஒதுக்கீடு, கொங்கு வேளாளர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது, கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது என கலைஞர் படைத்த சாதனைகள் ஏராளம்.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உரிமையை கலைஞர் நிலைநாட்டினார் என்றால், இப்போது கழகத் தலைவரோ அகில இந்தியாவுக்குமான இட ஒதுக்கீடு உரிமைகளை நிலைநாட்டியிருக்கிறார். மருத்துவ உயர்படிப்பில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய இட ஒதுக்கீட்டைச் சட்டப் போராட்டத்தால் சாத்தியப்படுத்தியவர் நமது தலைவர். நமது தலைவரால் 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே பிரதமர் வேட்பாளராக அடையாளங் காட்டப்பட்ட ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு வலுசேர்க்கும் வகையில் பேசியிருப்பது நம்பிக்கை தருகிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் - **'இந்தியா கூட்டணி'** வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால், சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், இட ஒதுக்கீடு உச்ச வரம்பு 50 சதவிகிதம் என்ற தடை தகர்க்கப்படும் என்றும் ராகுல் காந்தி உறுதியளித்திருக்கிறார். இதன் மூலம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு அவரவர் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு வருங்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

பெரியார் 'சுயமரியாதை இயக்கம்' கண்டு நூறாண்டுகள் நெருங்கிவரும் தருவாயில், ராகுல் காந்தி அளித்திருக்கும் நம்பிக்கை காலப் பொருத்தமானது. இட ஒதுக்கீட்டை அழிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் ஆட்சிக்கு வேட்டுவைக்கப் போவதும் கூட..!

### ஃப்ளாஷ்பேக்



**ஓய்வில் சந்திப்பு!**

1986-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் இளைஞர் அணி நிகழ்வுகளில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் கலந்துகொண்டார். பிறகு, பொன்னமராவதி பயணியர் விடுதியில் ஓய்வெடுக்க வந்தார். அவரை சந்திக்க 'சிறுகதை மன்னர்' எஸ்.எஸ்.தென்னரசு, எங்களை அழைத்துச் சென்றார். அப்போதைய பொன்னமராவதி ஒன்றிய பெருந் தலைவர் ஆலவயல் சுப்பையா தலைமையில் நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், எனது நண்பர்களுடன் தளபதியை சந்தித்தபோது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது!



மீனாட்சி சுந்தரம்

**-சே.மீனாட்சி சுந்தரம்,**
**2-வது வார்டு செயலாளர்,**
**பொன்னமராவதி பேரூராட்சி,**
**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**கலைஞரை பேட்டி கண்ட பிராவ்தா!**

**1966-ஆம் ஆண்டு கோபாலபுரம் இல்லத்தில் வைத்து, கலைஞர் கொடுத்த ஒரு பேட்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளிவந்த 'பிராவ்தா' ஆசிரியர் குழுவினர் நேரில் வந்து கலைஞரிடம் பேட்டி கண்டனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீண்ட அப்பேட்டியில் சமதர்மம், மொழிக் கொள்கை குறித்தெல்லாம் சுவாரசியமான பதில்களை அளித்தார் கலைஞர். வரலாற்றில் தனித்துவமான நேர்காணல் அது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 382




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131